1972 மார்ச் 7]

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : அதற்கு நகர சபைகளின் ஒப்புதல் தேவைப்படுகிறது. அவர்கள் கருத்து கேட்கப்பட்டிருக்கிறது. அவர்களின் கருத்துக்கள் அரசுக்கு வந்ததற்குப் பிறகு அதுபற்றி முடிவு எடுக்க வேண்டிவரும். அவர்கள் கருத்துக்கள் எல்லாம் திரட்டப்பட்டு வருகிறது. அது வந்ததற்குப் பிறகு முடிவு எடுக்கப்படும்.

நகராட்சிப்பள்ளி ஆசிரியர்களுக்கு ஓய்வூதியம்

*** 335 வினு—திரு. கே. என். குமாரசாமி :** மாண்புமிகு கல்வி-உள்ளாட்சித்துறை அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினவுக்கு விடையளிப்பாரா—

நகராட்சிப் பள்ளிகளில் பணியாற்றி ஓய்வு பெறும் ஆசிரியர்களுக்கு, ஓய்வு ஊதியம் வழங்கும்பொழுது, பஞ்சப்படியும் சேர்த்துக் கணக்கிட்டு ஓய்வூதியம் வழங்கும் செயற்குறிப்பு ஏதேனும் அரசு பரிசீலனையிலுள்ளதா ?

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : 26—2—1970-ம் தேதியோ அல்லது அதன் பிறகோ நகராட்சிப் பள்ளிகளிலிருந்து ஓய்வு பெறும் ஆசிரியர்களின் ஓய்வு ஊதியத்தைக் கணக்கிடும் பொழுது 1966-ம் ஆண்டு டிசம்பர் மாதத்திய பஞ்சப்படியையும் சேர்த்துக் கணக்கிட வேண்டும் என்று அரசு, தனது ஆணை எண் 1988 (நிலை) கல்வி, நாள் 17—11—1971-ல் உத்தரவிட்டுள்ளது.

திரு. கே. என். குமாரசாமி : அது நகரசபைகளில் அமுலாக்கப்பட்டு வருகிறதா ?

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : 17—11—1971-ல் அந்தப் பஞ்சப்படியையும் சேர்த்துக் கொடுக்க வேண்டுமென்று உத்தரவிட்டிருப்பதால் அதன் அடிப்படையில் இப்போது சம்பளம் வழங்கப்படும்.

ஊராட்சி ஒன்றியப் பணியாளர்களுக்கு ஓய்வூதியம்

*** 336 வினு—திரு. எம். முத்தையா :** மாண்புமிகு கல்வி-உள்ளாட்சித்துறை அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினவுக்கு விடையளிப்பாரா—

ஊராட்சி ஒன்றியங்களில் பணிபுரியும் எழுத்தர்கள், சுகாதார உதவியாளர்கள், மருத்துவ மாதுகள், கடைநிலை ஊழியர்கள், ஆயாக்கள், இரவு காவலர்கள் இவர்களுக்கு ஓய்வு

கால ஊதியம் வழங்க திட்டம் ஏதேனும் அரசு பரிசீலனையி லுள்ளதா ?

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : ஆம். இந்தப் பொருள் அரசின் பரிசீலனையில் உள்ளது.

திரு. எம். முத்தையா : அரசாங்கத்தின் பரிசீலனையில் உள்ளது என்று சொன்னார்கள். எப்போது நடவடிக்கைகள் எடுக்கப்படும் என்பதைப்பற்றி விளக்குவார்களா ?

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : ஊராட்சி ஒன்றியப் பள்ளி ஆசிரியர்களைப் பொறுத்தவரையில் ஊராட்சி ஒன்றிய நிதியிலிருந்து சம்பளம் கொடுக்கப்பட்டு வந்தால் இரண்டாவது ஊதியக் குழுவின் பரிந்துரையின் அடிப்படையில் அரசாங்கமே மேற்கொண்டு அந்த ஆசிரியர்களுக்கு லிபரலைஸ்ட் பென்ஷன் ஸ்கீம் என்ற அடிப்படையில் ஓய்வூதியத் திட்டத்தின் பயன்கள் ஏற்கனவே அளிக்கப்பட்டு வருகிறது.

திரு. தி. பொன்னுமலை : இந்த ஊராட்சி ஒன்றியங்களில் உள்ள ஆயாமார்களுக்குச் சம்பளம் கொடுப்பதில் பல ஊராட்சி ஒன்றியங்களில் ரூ. 30 என்றும், சில ஊராட்சி ஒன்றியங்களில் ரூ. 50 என்றும், சில ஊராட்சி ஒன்றியங்களில் ரூ. 70 என்றும் இப்படி பல்வேறாகக் கொடுக்கப்பட்டு வருகிறது. ஆகவே எல்லா ஊராட்சி ஒன்றியங்களிலும் ஒரேமாதிரியாகச் சம்பளம் கொடுப்பதற்கு ஏற்பாடு செய்யப்படுமா ?

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : அதுபற்றித்தான் பரிசீலனையில் இருந்து வருகிறது என்று சொன்னேன். ஒருமுகப் படுத்தவும், சீர்படுத்துவதற்குமான முயற்சி மேற்கொள்ளப்பட்டு வருகிறது.

திரு. பெ. சௌந்தரபாண்டியன் : ஊராட்சி ஒன்றியங்களில் பணியாற்றும் எழுத்தர்கள், ஆயாக்கள் போன்றவர்கள் ஊராட்சி ஒன்றியப் பணியாளர்களாகக் கருதப்படுகிறார்கள். இவர்களை அரசாங்கப் பணியாளர்களாக மாற்றுவதற்கு உத்தேசமுண்டா என்று அறிய விரும்புகிறேன்.

1972 மார்ச் 7]

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : அதுதான் மூலக் கேள்வி. அரசாங்கத்தின் பரிசீலனையில் இருந்து வருவதாகக் குறிப்பிட்டேன்.

திரு. வி. கே இராஜாப்பிள்ளை : ஊராட்சி ஒன்றியங்களில் தற்காலிகமாக வேலை செய்துவரும் தையல் ஆசிரியைகள் போன்றவர்களை நிரந்தரமாக்கும் திட்டம் ஏதாவது அரசின் பரிசீலனையில் உள்ளதா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : அதுபற்றி தனிக் கேள்வி போட வேண்டும். சில பேர்களை பார்ட் டைமாக வைத்துக்கொள்ளும்போது அவர்களைப் பகுதிநேர ஊழியர்களாகத் தான் வைத்துக்கொள்ள முடியும். முழு நேரமாக்குவதற்குத் தனி முயற்சிகள் மேற்கொள்ள வேண்டும். தனிக் கேள்வி போட்டால் விவரங்கள் தரப்படும்.

அம்மாப்பேட்டையிலுள்ள அரசு மருந்தகம்

* 337 வினா—திரு. ந. சோமசுந்தரம் : மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

தஞ்சை மாவட்டம், அம்மாப்பேட்டை அரசினர் மருந் தகத்தை அரசினர் மருத்துவ மனையாக விரிவு படுத்துகின்ற செயற்குறிப்பு ஏதேனும் அரசின் பரிசீலனையில் உள்ளதா ?

மாண்புமிகு திரு. க. அன்பழகன் : இல்லை.

திரு. பெ. சௌந்தரபாண்டியன் : தஞ்சை மாவட்டம் அம்மாப்பேட்டையில் உள்ள மருந்தகம் நீண்ட நெடுங்காலமாக எவ்வித படுக்கை வசதியும் இன்றி இருக்கிறது. ஆகவே இதை விரிவுபடுத்த இனிமேலாவது அரசாங்கம் மறுபரிசீலனை செய்யுமா?

மாண்புமிகு திரு. க. அன்பழகன் : மருந்தகம் என்பதற்கும் மருத்துவமனை என்பதற்கும் இடையே உள்ள வேறுபாட்டை உறுப்பினர் அவர்கள் எண்ணிப் பார்க்கவேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன். மருந்தகம் டிஸ்பென்ஸரி மட்டும்தான். படுக்கை வசதியை விரிவுபடுத்துவது தாலுகா மருத்துவ மனைகளிலேயே